செய்தி வெளியீடு எண்:463 நாள்:17.07.2021

# திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பழமை மாறாமல் புதுப்பித்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டம்.

சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறையின் கூட்டரங்கில் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலினைப் பழமை மாறாமல் புதுப்பித்தல் தொடர்பான பெருந்திட்ட ஆய்வுக் கூட்டம் 17.07.2021 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு, மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கனிமொழி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எச்.சி.எல் நிறுவனத்தினால் நியமனம் செய்யப்பட்ட கட்டிடக்கலை வல்லுனர்களால் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலினைப் பழமை மாறாமல் புதுப்பித்தல் மற்றும் பெருந்திட்டம் தொடர்பான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அப்பணிகள் தொடர்பான முதல்கட்ட விளக்கக் காட்சியில் திருக்கோயிலின் கட்டுமானம், பக்தர்களின் அடிப்படை வசதிகள், முக்கிய திருவிழாக்காலங்களில் அதிகப்படியான பக்தர்களை ஈர்க்கும் வகையில் மேலாண்மை செய்தல், காற்றோட்ட வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கருத்துரைகள் கலந்தாய்வு செய்யப்பட்டன.

இத்திருக்கோயில் சுமார் 63 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளதால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து செயல்பட வேண்டியுள்ளது. குறிப்பாகத் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக அடிப்படை வசதியான குடிநீர் வசதி, கழிவு நீர் மேலாண்மை, மின்னாளுமை, வாகனம் நிறுத்தும் இடங்கள், ஒளியமைப்பு இவைகளை அதிக செலவின்றி தரமானதாக அமைத்தல் மற்றும் மின் சிக்கனத்தையும் கருத்தில் கொள்ளுதல், இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர் பணியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், பக்தர்கள் வரிசையில் ஓய்வெடுப்பதற்கான இடங்களில் கழிப்பறை, குடிநீர் மற்றும் பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகள் இப்பெருந்திட்டத்தில் இடம்பெற வேண்டும் என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கோயில் வளாகத்தில் அதிகளவிலான திருமணங்கள் ஒரே நாளில் திருக்கோயிலில் நடைபெறும் போது அவற்றை மேலாண்மை செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும், திருக்கோயில் சுற்றுப்புறத்தில் இயக்கப்படும் பொதுப் போக்குவரத்து மற்றும் தனியார் வாகனங்கள் ஓர் இடத்தில் முறைப்படுத்தப்பட்டு அங்கு இருந்து திருக்கோயிலுக்கு மினி வாகனம் இயக்கப்பட வேண்டும் எனவும், திருக்கோயில் சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்களின்

வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு மேற்படி திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை முதன்மைச் செயலாளர், முனைவர் பி.சந்திர மோகன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர், திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர், திரு.கண்ணன், இ.ஆ.ப., திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், தக்கார், திரு.கண்ணன், விளாத்திகுளம், சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.மார்க்கண்டேயன், எச்.சி.எல் நிறுவன கட்டிடக்கலை வல்லுனர் திருமதி.ஸ்ரீமதி உட்பட பல அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9